# படல்கும்புர பிரதேச சபை

## மொனராகலை மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுலை 23 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு படல்கும்புர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 70,500,000 தொகை என கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் குறிப்பிட்ட தொழிலில் தகைமையுடைய பெறுமதி மதிப்பீட்டு தொழிலில் அங்கத்தவர் ஒருவரினால் பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.

(ஆ) சபையினால் பல்வேறு கருமங்களுக்காக கடந்த ஆண்டுகளில் வழங்கியிருந்த ரூபா 466,816 தொகை முற்பணம் முறையான அங்கீகாரம் இன்றி திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,711,134 தொகை எனினும், அவை ரூபா 3,032,497 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,321,364 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டியிருந்த பலவினச் செலவுகள் ரூபா 515,527 தொகைக்காக கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

09 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 40,896,959 தொகையாகக் காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 6,856,061 ஆக இருந்தது.

1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

---

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய உள்ளூராட்சி ஓய்வூதியம் ரூபா 305,674 தொகையினை மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 272,004,361 தொகையான 04 சொத்து விடயங்கள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 37,936,331 தொகைக்கான 3 பொறுப்பு விடயங்களைக் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

2. நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,457,360 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வருமானத்தை மிகைத்துள்ள மீண்டுவரும் செலவு ரூபா 3,043,204 தொகையாகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 10,500,564 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

---

2.2.1 நிலுவை வருமானம்

---

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 8,574,747 தொகையாகக் காணப்பட்டதுடன் நிலுவை வருமானத்தை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.2 வீத வரி

-------------

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 729,791 தொகைக்கான நிலுவை வருமானத்தில் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்திருந்தது நூற்றிற்கு 29 ஆகிய குறைந்த சதவீதமே.

(ஆ) மீளாய்வாண்டின் போது சிட்டையிடப்பட்ட பெறுமதி ரூபா 373,693 தொகையில் இருந்து நூற்றிற்கு 51 சதவீதம் மாத்திரமே அறவீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 140(1) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2006 ஆண்டின் பின்னர் வீத வரிக்காக பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 112,253 மற்றும் முத்திரைக் கட்டணத் தொகை ரூபா 1,094,045 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------------

மின் சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் வீதி விளக்குகள் செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்கான கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள், வீதி விளக்குகளை செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்காக சேவை வழங்குனர் ஒருவராக கடமையாற்ற வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 47,412 செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வீதி விளக்குகள் பொருத்தும் போது பொருத்தும் விதம், பொருத்த வேண்டிய விளக்குகின் வகை, எண்ணிக்கைகள் என்பன கடிதத்தின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

3.2 ஒப்பந்த நிருவாகம்

-----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆண்டின் போது தனிமையான கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி ஏற்பாடுகளின் பிரகாரம் 09 பாதைகளில் நீர்க் குழாய்களை நீடிப்புச் செய்வதற்காக 09 ஒப்பந்த சங்கங்களுக்கு முன்னைய ஆண்டின் போது ரூபா 6,202,844 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. 2 அகழிகள் (63mm) நீளமீற்றர் ஒன்றிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ரேட் ஆகிய ரூபா 931 தொகை எனினும் அதனை ரூபா 1,047 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளமையால் நீர் குழாய் 04 பாதைகளுக்காக ரூபா 359,832 தொகையொன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் நேர்கூலி அடிப்படையில் மேற்கொள்வதற்காக ரூபா 500,000 தொகைக்கான பண்ட மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 580,765 தொகையொன்று

செலவிடப்பட்டிருந்தமையால் பண்ட மதிப்பீட்டை விஞ்சிய ரூபா 80,765 தொகை செலவிடப்பட்டிருந்தது.

4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

--------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் மூலம் மதிப்பீட்டு வருமானம், செலவுகள் மற்றும் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம், செலவுகள் இடையே காணப்பட்ட முக்கியமான முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகள் கட்டுப்பாட்டின் போது பாதீடு ஆக்க பூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

----------------------------------------------------

சபையினால் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------

மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு அலகின் மூலம் போதியளவு அகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

------------------------------------------------------------------------

2009 ஜூன் 09 திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் DMA/2009(1) இலக்கங் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டல் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைப்பதற்காக மீளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்